செ.வெ.எண்: 52/பிப்ரவரி நாள்: 25.02.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## குயவன்குடி கிராமத்திலுள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில் ராபி முன்பருவ வேளாண்மை விழிப்புணர்வு பெருவிழா

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

இராமநாதபுரம் மாவட்டம், குயவன்குடி கிராமத்திலுள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில் இன்று (25.02.2016) தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், இராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் ஒருங்கிணைந்து நடத்திய ராபி முன்பருவ வேளாண்மை விழிப்புணர்வு பெருவிழா மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையேற்று பேசியதாவது:

இந்தியாவில் வாழும் பெரும்பகுதி மக்கள் விவசாயத்தினை முக்கிய தொழிலாக கொண்டு வாழ்ந்து வருகின்றனர். விவசாயிகள் வேளாண்மை தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வு அடைந்து பயன்பெறும் விதமாக இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் மூலம் இந்தியாவில் உள்ள அனைத்து வேளாண்மை அறிவியல் நிலையங்களிலும் ராபி முன்பருவ வேளாண்மை விழிப்புணர்வு பெருவிழா நடத்தப்பட்டு வருகிறது. இவ்விழாவில் பல்வேறு வேளாண்மை தொழில்நுட்ப வல்லுநர்கள் கலந்து கொண்டு இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மண் வகைகள் குறித்தும் மண்வளத்திற்கு ஏற்றவாறு தேவையான அளவு உரம் பயன்படுத்தி வளமான மகசூல் ஏற்படுத்துவது குறித்து விளக்கம் அளிக்கப்படுகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்தப் பரப்பளவு 4,08,957 ஹெக்டேர் ஆகும். அதில் 13,140 ஹெக்டேர் பரப்பளவில் நெற்பயிர்களும், 9,046 ஹெக்டேர் பரப்பளவில் தென்னை மரங்களும், 21,461 ஹெக்டேர் பரப்பளவில் மிளகாய் பயிர்களும், 4,243 ஹெக்டேர் பரப்பளவில் பயிறு வகைகளும், 4,516 ஹெக்டேர் பரப்பளவில் நிலக்கடலை பயிர்களும், 4,296 ஹெக்டேர் பரப்பளவில் பல்வேறு தானியங்களும், 1,910 ஹெக்டேர் பரப்பளவில் கொத்தமல்லியும் பயிரிடப்பட்டு வருகின்றன. இவ்விழாவில் கலந்து கொண்டுள்ள விவசாய பெருமக்களுக்கு வானிலை சார்ந்த அறிவுரைகள், வயல்வெளி நிலங்களில் ஆய்வு மேற்கொள்ளுதல், வறட்சியைத் தாங்கி வளரும் நெல் ரகம் குறித்த விளக்கங்கள், பருத்தி, மிளகாய், பயிறு மற்றும் நிலக்கடலை ஆகியவற்றில் மேம்படுத்தப்பட்ட சாகுபடி முறைகள், தென்னை உற்பத்தியை அதிகரிக்கும் முறைகள், பண்ணைக்குட்டைகள் மற்றும் தடுப்பணைகள் வாயிலாக மண்ணில் நீர்பிடிப்புத் திறனை அதிகரித்தல் உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப்படுகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் அதிக அளவில் பண்ணைக்குட்டைகள் அமைப்பதற்கு விவசாய பெருமக்கள் முன்வர வேண்டும். மேலும் இப்பயிற்சியின் கலந்து கொண்டுள்ள விவசாயிகள் வேளாண் தொழிற்சார்ந்த தொழில்நுட்ப பயிற்சிகளை பெற்று பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசினார்.

முன்னதாக வேளாண்மை பெருமக்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டிருந்த வேளாண்மை விழிப்புணர்வு கண்காட்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் சுழல் கலப்பை பொருத்திய நேரடி நெல் விதைப்பான் , தென்னைப் பயிர் கழிவுகளை தூளாக்கும் இயந்திரம், காளான் வளர்ப்பு, இயற்கை வேளாண்மை உற்பத்தி பொருட்கள், மண்புழு உரம் தயாரித்தல், மண்ணில்லா தீவனப் பயிர் வளர்த்தல் உள்ளிட்டவற்றை பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை அறிவியல் நிலையம் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.ஐ.சீகன்பால், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்குநர் முனைவர்.ஹெ.பிலிப், மீன்வளத்துறை துணை இயக்குநர் திரு.காசிநாத பாண்டியன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.வெள்ளைச்சாமி உட்பட அரசு அலுவலர்கள், வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர்கள், கடலோர உவர் ஆராய்ச்சி மைய பேராசிரியர்கள், விவசாய பெருமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**